# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வெள்ளிக்கிழமை 10.09.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# வட, கிழக்கு இணைப்பை பற்றி பேசியவர்கள் இன்று நான்கு பிரிவுகளாக பிரிந்து நிற்கிறார்கள்

## இவர்கள் தான் மட்டக்களப்பிற்கு வந்து உபதேசம் செய்கின்றார்கள்; சந்திரகாந்தன்



(மட்டு சுபீட்சம் நிருபர்)

வடக்குகிழக்கு இணைப்பை பற்றி மேடைகளில் பேசியவர்கள் இன்று ஐக்கிய நாடுகள் சபைக்கு 4 பிரிவாக பிரிந்து கடிதம் அனுப்பியுள்ளனர். இவ்வாறு பல கூறுகளாக பிரிந்து இருப்பவர்கள் தான் மட்டக்களப் பிற்கு வந்து உபதேசம்

02 ஆம் பக்கத்தில்...

# தமிழரசுக் கட்சி ஜெனீவாவுக்கு கடிதம் அனுப்பவில்லை தமிழரசுக் கட்சி- கூட்டமைப்பை உடைத்து செயற்படவில்லை

## சுமந்திரன் தெரிவிப்பு



(ராஜ்)

'ஜெனிவா கூட்டத்தொடர் தொடர் பாக தமிழரசுக் கட்சி எந்தவிதமான கடி தமும் அனுப்பவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பாக அதனுடைய தலைவர் சம்பந்தனின் கையொப்பத் துடன் கடிதமொன்று அனுப்பப்பட் டது'என்று பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாரா ளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோர் வவுனி யாவிலுள்ள தமிழரசுக் கட்சி அலுவல கத்திற்கு சென்றிருந்தனர்.

இதன்போது வவுனியாவில் பொது மக்களின் காணிகள் வனவள திணைக் களத்தினரால எல்லைப்படுத்தப்பட்டு வருவதாக

02 ஆம் பக்கத்தில்...

# இலங்கையில் பாரிய உணவு தட்டுப்பாடு ஆபத்து

இலங்கையில் பாரிய உணவு தட்டுப்பாடு ஏற்படும் ஆபத்துக் கள் உள்ளதென இந்தியாவின் பிரபல Frontline சஞ்சிகை தெரி வித்துள்ளது.

கொவிட் தொற்றினால் ஏற்பட் டுள்ள பொருளாதார நெருக்கடி யின் பிடியில்

02 ஆம் பக்கத்தில்...

# ஐ.நா.வுக்கு சென்ற அரசின் போலி தகவல்களுடனான கடிதம்

## விக்னேஸ்வரன் ஆதங்கம்

(ஜூட்)

ஐ.நா உயர்ஸ்தானிகருக்கு, இலங்கை அரசாங்கத்தால் போலி தகவல்களுடன் அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பில் ஆதங்கம் வெளி யிடப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக் னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிக ருக்கு

02 ஆம் பக்கத்தில்...



# ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடிதம்

ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் குத் தமிழர் தரப்பு குரலாக உறுதியு டன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது நிலைப்பாட்டைத் தெரிவித்து அதன் கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வ ராசா கஜேந்திரன் கையொப்பம்

02 ஆம் பக்கத்தில்...

# 623 அத்தியாவசியமற்ற பொருட்கள் தொடர்பில் அரசாங்கம் எடுத்துள்ள முடிவு

தெரிவு செய்யப்பட்ட அத்தியா வசியமற்ற அல்லது அவசரமற்ற 623 பொருட்கள் தொடர்பில் முக்கிய தீர்மானமொன்று எடுக் கப்பட்டுள்ளது.

அதன்படி இந்த பொருட்களின் இறக்குமதிகளுக்காக 100 சதவீத பண எல்லை வைப்பு தேவைப் பாட்டினை விதிப்பதற்கு மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

மத்திய வங்கியின் நாணய சபை கூட்டமானது நேற்றைய தினம்

02 ஆம் பக்கத்தில்...

# மனித உரிமை பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டியது மிகவும் அவசியமானது

## இலங்கைக்கு அமெரிக்கா எடுத்துரைப்பு



இலங்கையின் நல்லிணக்க முனைப்புக்களில் முழுமையாக இணைந்து செயற்படுவதாக அமெ ரிக்கா அறிவித்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூது வர் பதவியிலிருந்து விடைபெறும் தூதுவர் எலய்னா டெப்லிட்ஸ் இது குறித்து குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டியது மிகவும் அவசியமானது. அமெரிக்கர்களுக்கு மட்டுமன்றி அமெரிக்காவுடன் இணைந்து செயற்படும் அனைத்து ஜனநாயக பங்காளர்களும் மனித உரி மைகளை மதித்து செயற்பட வேண் டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த கால மற்றும் தற்போதைய மனித உரிமை பிரச்சினைகளுக்கு தீர்வு

02 ஆம் பக்கத்தில்...



மட்டக்களப்பு மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத் திலுள்ள களுவாஞ்சிகுடி கிராமத்தைச் சேர்ந்த கண்டு பிடிப்பாளர்கந்தசாமி கோகுல ரஞ்சன் விவசாயிகளுக்காக உழவு இயந்திரம் ஒன்றை கண்டுபிடித்து வடிவமைத்துள்ளதைக் காணலாம்.

படம்: ரக்ஸனார

# கோரோனா உடலங்களை அடக்கம் செய்ய பணம் செலுத்த தேவையில்லை



(படுவான்பாலகன்)

கெரோனா சடலங்களை அடக்கம் செய்வதற்கு யாரும் பணம் செலுத்தத் தேவையில்லையென மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பணிப் பாளர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

# திருகோணமலையில் விசேட சுற்றிவளைப்பு: பதுக்கி வைக்கப்பட்டிருந்த 120 சீனி மூடைகளுக்கு சீல்



(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை கிண் ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கச்சகொடித் தீவு பிரதேசத்தில் சூட்சமமான முறையில்

02 ஆம் பக்கத்தில்...

# ஆயித்தியமலையில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை; ஒருவர் கைது



(சதீஸ்)

மட்டக்களப்பு ஆயித் தியமலை பொலிஸ் பிரி வில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று பொலிஸாரால் முற்றுகை யிட்டதில் ஒருவர் கைது

02 ஆம் பக்கத்தில்...

# அட்டாளைச்சேனை ஆற்றுப் பகுதியில் இறந்து மிதக்கும் மீன்கள்

(எம்.ஏ.றமீஸ்)

அட்டாளைச்சேனை பிரதேசத் தில் அமையப் பெற்றுள்ள கோணா வத்தை ஆற்றில் உள்ள மீன்கள்

02 ஆம் பக்கத்தில்...












## 623 அத்தியாவசியமற்ற பொருட்கள்

இடம்பெற்ற நிலையில் இதன்போது குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதன்படி, கைப்பேசிகள், மின்விசிறிகள், தொலைக்காட்சிகள், குளிர்சாதன பெட்டிகள், புடவைகள், உதிரிப்பாகங்கள், வளிசீராக்கல் இயந்திரம், சொக்லேட், ஆப்பிள், திராட்சை, ஆரஞ்சு, மோல்ட், சீஸ் மற்றும் வெண்ணெய் போன்ற 623 பொருட்கள் அத்தியாவசியமற்ற அல்லது அவசரமற்ற பொருட்களாக பட்டியலிடப்பட்டுள்ளன.

அதிகப்படியான இறக்குமதிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் அந்நிய செலாவணி சந்தையின் உறுதிப்பாட்டினையும், வெளிநாட்டு நாணய சந்தையின் திரவத்தன்மையினையும் பாதுகாப்பதே இதன் நோக்கம் என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலையில் விசேட சுற்றிவளைப்பு

மறைத்து வைக்கப்பட்டிருந்த சீனி 50 கிலோ கிராம் நிறையுடைய 120 மூடைகள் நேற்று கண்டுபிடிக்கப்பட்டதுடன் அவற்றுக்கு முத்திரை இடப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்ஷன பாண்டிகோரல தெரிவித்தார்.

இரகசியமாக கிடைக்கப்பெற்ற தொலைபேசி அழைப்பை அடுத்து குறித்த பிரதேசத்திற்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்கள் அனுப்பப்பட்டு குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது பிறிதொரு பொருட்கள் அடங்கிய களஞ்சியசாலையில் குறித்த 120 சீனி மூடைகளும் பதுக்கி வைக்கப்பட்டு இருந்ததாகவும் உரியநபருக்கு எதிராக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட சில பொருட்கள் கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமாக விற்கப்பட்டு வருவதாக தமக்கு முறைப்பாடு பொதுமக்களால் செய்யப்பட்டுள்ளதாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கு அவ்வாறான பிரதேசங்களை இனங்கண்டு சுற்றிவளைப்புகள் மேற்கொண்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கியதாக இதன்போது அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் கையிருப்பில் பொருட்களை வைத்துக்கொண்டு அவற்றை மொத்த ,சில்லறை அடிப்படையில் விற்பனை செய்யாமல் செயற்கையான முறையில் பொருட்களுக்கு தட்டுப்பாட்டை ஏற்படுத்தி அவற்றை பதுக்கி வைத்திருப்பது அனுமதிக்க முடியாது எனவும் மக்கள் பொருளாதார அசௌகரியங்களுக்கு மத்தியில் தற்போது வாழ்ந்து வருவதாகவும் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைக்கு பொருட்களை வழங்க வேண்டிய தேவை காணப்படுகின்றதாகவும் தெரிவித்தார்.

மேலும் இவ்வாறான சுற்றிவளைப்புகள் மாவட்டத்தினுடைய பல்வேறு பிரதேசங்களிலும் தொடராக மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் பாவனையாளர்களது நலன் தொடர்பில் கூடிய அக்கறை கொண்டு இச்செயற்பாட்டை தொடர்ச்சியாக மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கு உரிய அறிவுறுத்தல் தம்மால் இது தொடர்பில் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் இதன்போது தெரிவித்தார்.

மாவட்டத்தினுடைய ஏதாவது ஒரு பிரதேசத்தில் அறிவிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமாக பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்ற பொழுதும் அதே போன்று நெல் அளவுக்கதிகமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பது அல்லது களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருப்பது தொடர்பான விபரங்கள் மக்களுக்கு தெரியுமெனின் அது குறித்து மாவட்ட செயலகத்தையோ, பிரதேச செயலகத்தையோ அல்லது பாவனையாளர்கள் அதிகார சபையையோ தொடர்பு கொண்டு குறித்த தகவல்களை வழங்குமாறு இதன்போது அரசாங்க அதிபர் மக்களிடம் வேண்டிக் கொண்டார்.

நேற்று நடைபெற்ற குறித்த சுற்றிவளைப்பின் போது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை மாவட்ட அலுவலக விசாரணை உத்தியோகத்தர் தனசேகரன் வசந்தசேகரன் தலைமையிலான உத்தியோகத்தர்கள் சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் பாரிய உணவு தட்டுப்பாடு

இலங்கை சிக்கியுள்ளதாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உணவு மாத்திரமின்றி மருந்து தட்டுப்பாடும் இலங்கையில் ஏற்பட்டுள்ளதாகவும், சீனி, அரிசி உட்பட பொருட்களை கொள்வனவு செய்வதற்காக மக்கள் கடைகளுக்கு முன்னால் வரிசைகளில் நிற்பதனை அவதானிக்க முடிவதாக குறிப்பிடப்படுகின்றது.

சிலர் உணவு பற்றாக்குறைக்கு தயாராகியுள்ள நிலையில் பாரிய அளவில் விலையிலும் உணவு பொருட்களை கொள்வனவு செய்வதாக அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் அனைத்து பொருட்களின் விலையும் அதிகரித்துள்ளதாகவும் சாதாரண மக்களால் அந்த நிலைமையை தாங்கிக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருட்களின் விலை பாரிய அளவு அதிகரித்துள்ளதனை தொடர்ந்து இலங்கை அதிகாரிகள் பொருளாதாரம் நடவடிக்கை தொடர்பில் அவசர நிலைமையை அறிவித்துள்ளனர்.

## ஐ.நா.வுக்கு சென்ற அரசின் போலி தகவல்

அண்மையில் அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையில் உண்மைக்கு புறம்பான தகவல்கள் அடங்கியுள்ளன.

இந்த நிலையில், உண்மையான நிலைமைகள் குறித்த தகவல்கள் அடங்கிய கடிதம் ஒன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உயர்ஸ்தானிகருக்கு நேற்று அனுப்பப்பட்டுள்ளது. போரின் இறுதி நாளில் 14000 பேர் மாத்திரமே இறந்தார்கள் என்பது உள்ளிட்ட உண்மைக்கு புறம்பான பல கருத்துகள் அரசாங்கத்தின் அறிக்கையில் உள்ளடங்கி இருக்கிறது என சுட்டிக்காட்டியுள்ளார்.




## அருணலு தேசிய வேலைத் திட்டம் ஓட்டமாவடியில் ஆரம்பம்

(ந.குகதர்சன்)

ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைய சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் அருணலு வாழ்வாதார அபிவிருத்தி தேசிய வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில்நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

நேற்று நாடளாவிய ரீதியில் வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கு வீட்டு தோட்டப்பயிர்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது இதற்கமைய ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் காகிதநகர் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 25 குடும்பங்களுக்கு ஆரம்ப கட்டமாக வீட்டுத்தோட்ட விதை பயிர்கள் வழங்கப்பட்டன.



காகிதநகர் சமூக அபிவிருத்தி காரியாலயத்தில் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் எம்.ஐ.ஏ. அஸீஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக ஓட்டமாவடி பிரதேச செயலக வி.தவராஜா கலந்து கொண்டதுடன் சமுர்த்தி திட்ட முகாமையாளர் எம்.பாஸ்கரன், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் எம்.என்.எம்.ஷாஜகான் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எல்.சியாத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் 900 குடும்பங்கள் விதை பயிர்கள் வழங்குவதற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன் ஆரம்ப கட்டமாக 25 குடும்பங்களுக்கு இன்று பயிர் விதைகள் வழங்கப்பட்டுள்ளதாக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் எம்.ஐ.ஏ. அஸீஸ் தெரிவித்தார்.

## அட்டாளைச்சேனை ஆற்றுப் பகுதியில் இறந்து மிதக்கும் மீன்கள்

நேற்றைய தினம்(09) திடீரென இறந்து மிதந்து வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாற்றின் மூலம் பல்லாயிரக் கணக்கான நெல் விவசாயச் செய்கை இடம்பெற்று வருவதோடு, இவ்வாற்றில் மீனவத் தொழிலில் ஈடுபட்டு வரும் பல நூற்றுக்கணக்கானோரின் வாழ்வாதார தளமாகவும் அட்டாளைச்சேனை கோணாவத்தை ஆறு இருந்து வருகின்றது.

இவ்வாற்றில் நேற்றுக் காலை முதல் சிறியளவிலான மீன்கள் இறந்து மிதந்து காணப்பட்டதோடு, மாலை வேளையாகும் போது பல்லாயிரக் கணக்கான மீனினங்கள் இறந்து கரையொதுங்கி வருகின்றது. இதனால் இப்பிரதேசத்தில் துர்நாற்றம் வீசி வருவதோடு, இப்பிரதேச மக்களின் இயல்பு வாழ்விலும் மிகுந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் நீண்ட காலமாக நிலவி வரும் வரட்சியுடனான காலை நிலை காரணமாக இவ்வாற்றுப் பகுதியில் உவர் தன்மை ஏற்பட்டமை மீனினங்கள் இறப்பதற்கு காரணமாக இருக்கக் கூடும் எனவும், ஆற்று நீரில் ஏதேனும் இரசாயனப் பதார்த்தங்கள் சேர்வதனாலும் இதுபோன்ற சம்பவங்கள் நிகழக்காரணமாவும் அமையலாம் என பிரதேச மக்களும் துறைசார்ந்தோரும் தெரிவிக்கின்றனர்.

இது போன்று இதற்கு முன்னர் இவ்வாறு பெருந் தொகையான மீனினங்கள் இறந்து கரையொதுங்கவில்லை எனவும் இவ்வாறு பல்வேறு இன மீன்கள் இறந்து கரையொதுங்குவதானது தமக்கு மிகுந்த அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளதாகவும் கரையோர பிரதேச மக்களும் மீனவர்களும் தெரிவிக்கின்றனர்.

## ஆயித்தியமலையில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை; ஒருவர்

செய்யப்பட்டதுடன் கசிப்பு, கோடா பரல்கள் போன்றவையும் மீட்கப்பட்டதாக ஆயித்தியமலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எம். ஆர். எஸ். கோணர தெரிவித்தார்.

ஆயித்தியமலை கற்பானைக் குளம் காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டோது புலனாய்வு பிரிவின் இரகசிய தகவலுக்கமைவாக வியாழக்கிழமை (09) மேற்கொண்ட சுற்றிவளைப்பில் மூன்று பரல் கோடா, 25 லீற்றர் கசிப்பு மற்றும் சிலெ பொருட்களுடன் ஒருவர் கைது செய்யப்படுள்ளதாக ஆயித்தியமலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எம். ஆர். எஸ். கோணர தெரிவித்தார்.

கைது செய்யப்பட நபரையும், கசிப்பு உள்ளிட பொருட்களையும் நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## கொரோனா உடலங்களை அடக்கம் செய்ய பணம் செலுத்த

சூடுபத்தினசேனையில் புதைப்பதற்கு எந்த விதமான பணமும் அறவிடுவதில்லை ஆனால் குறித்த உடலத்தை எரிப்பதாயின் மன்னம்பிட்டியில் உள்ள தகன சாலைக்கு 12 ஆயிரம் கட்டவேண்டிய நிலையுள்ளது. அதனையும் கட்ட கூடிய வசதி இல்லாதவிடத்து அரசாங்கத்தினால் இலவசமாக எரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலங்களில் கொரோனா தொற்றால் மரணித்தவர்களை அடக்கம் செய்வதற்காக 40 ஆயிரம் ரூபாய் பணம் கேட்பதாக கிடைக்கப்பெற்ற தகவல் அடிப்படையில் நேற்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

கொரோனாவால் மரணித்தவர்களுக்கு இலங்கை அரசாங்கம் தங்களது செலவிலேயே அந்த சடலங்களை அடக்கம் செய்வதாகவும் தயவு செய்து யாரும் ஏமாற வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சில இடங்களில் கொரோனாவால் இறந்த சடலங்களை அடக்கம் செய்வதற்கு பணம் அறவிட்டமை வேதனைக்குரிய விடயம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே இவ்வாறு யாரும் பணம் வசூலிப்பதாக இருந்தால் உடனடியாக தனது கவனத்துக்கு கொண்டு வரும்படியும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார் .

ஆகவே மக்கள் கொரோனா மரணம் சம்பந்தமான விடயங்களை மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக செயற்படுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு தமிழ்த் தேசிய மக்கள்

இட்டு கடிதம் ஒன்றை நேற்று அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும்,

இந்த கடிதத்தில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை பாரப்படுத்துவதே தமிழர்களுக்கு நீதி கிடைப்பதற்கான ஒரே வழி, காணாமல் போனோருக்கான அலுவலகம் என்பது இலங்கை அரசின் வெறும் ஏமாற்று தந்திரமே.

தொடரும் அடக்குமுறைகளைக் கண்காணிக்க மனித உரிமை ஆணைக்குழு ஒரு விசேட தூதுவரை நியமிக்க வேண்டும்.

அத்தோடு, வடக்கு கிழக்கில் மனித உரிமை ஆணையக்கத்தின் ஒரு கள அலுவலகம் திறக்கப்பட்டுத் தொடரும் அடக்குமுறைகள் கண்காணிக்கப்பட வேண்டும்.

இராணுவமயமாக்கல் பல்வேறு பரிணாமங்களில் நடந்து தமிழ் மக்களின் இருப்பு தற்போதும் கேள்விக்கு உள்ளாக்கப்படுவது குறித்து ஐ.நா பிரேரணை கவனத்தில் எடுக்காமை மிகுந்த கவலைக்கு உரியது.

இது குறித்து ஐ.நா கவனம் செலுத்த வேண்டும். இலங்கையின் நடைமுறை அரசியலமைப்பின் 13வது திருத்தச் சட்டம் , தமிழர்களின் தேசிய இனப்பிரசனைக்கான தீர்வுக்கு ஒரு ஆரம்பப்புள்ளியாக் கூட கருதப்பட முடியாதது.

இலங்கை பல் தேச கட்டமைப்பு கொண்ட நாடாக உருவாகக்கூடிய , தமிழர்களின் தமிழ்த் தேசத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் ஒரு அரசியலமைப்பு மூலமே தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கும் என அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மனித உரிமை பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டியது மிகவும்

காணப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த கால மற்றும் நிகழ்கால அநீதிகளுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக அரசாங்கமொன்று அந்நாட்டின் அனைத்து மக்களுக்கும் பொறுப்பு கூற வேண்டும் என்பதே அமெரிக்காவின் நிலைப்பாடு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் குறித்து மெய்யான விசாரணை நடாத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க முனைப்புக்கள், காலமாறு நீதிப் பொறிமுறைமை மற்றும் நீடித்து நிலைக்கும் சமாதானத்தை நிலைநாட்டுவதில் அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார ரீதியில் வெற்றியளிக்கக் கூடிய கொள்கைகளை வகுப்பது குறித்து அரசாங்கம் சிரத்தை காட்ட வேண்டுமென ஊக்கப்படுத்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழரசுக் கட்சி ஜெனீவாவுக்கு கடிதம் அனுப்பவில்லை

மக்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள சுமந்திரன்,

வவுனியா மாவட்டத்திலுள்ள இத்திகுளம் பிரதேசத்திலே நீண்ட காலமாக மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அதனை ஒரு எல்லைப் பிரச்சினையாக மாற்ற முயற்சிப்பதாக தெரிகின்றது. வவுனியா எல்லைக்குள் இருந்ததை வவுனியா தெற்கு பிரிவுக்குள் இருப்பதாக காட்டுவதற்கு முயற்சிக்கின்றனர். இது தொடர்பாக மேலதிக நடவடிக்கை எடுப்பதற்காக நாங்கள் பிரதேச செயலாளரோடு பேசியிருக்கின்றோம் என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இவ்வாறான விடயம் இனியும் தொடர்ந்து நடைபெறுமாக இருந்தால் நாங்கள் மேலிடத்தில் தெரியப்படுத்தவும் இது தொடர்பாக குரல் எழுப்புவதற்கும் முடிவெடுத்திருக்கின்றோம். இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவும் ஆராய்ந்து வருகின்றோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை ஜெனீவாவுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் குறித்து கருத்த வெளியிட்ட சுமந்திரன், ஜெனீவாவுக்கு தமிழரசுக் கட்சி எந்தவிதமான கடிதத்தையும் அனுப்பவில்லை. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் கையொப்பத்தில் கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது என குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற ஒரு கட்சியே, அந்த கூட்டமைப்பாக தான் நாங்கள் செயற்பட்டு வருகின்றோம். ஏனைய கட்சிகள் வேறாக செயற்பட்டு வருவது தொடர்பாக நாங்கள் அவர்களோடு பேசலாம். ஆனால் தமிழரசுக் கட்சியை பொறுத்தவரையில் கூட்டமைப்பை உடைத்து தனியாக செயற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

## வட, கிழக்கு இணைப்பை பற்றி பேசியவர்கள் இன்று நான்கு

செய்கின்றார்கள் என பாராளுமன்ற உறுப்பினரும் மட்டு. மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கள்ளியங்காட்டில் லங்கா சதொச மொத்த விற்பனை நிலையத்தை வியாழக்கிழமை (9) திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் சுமத்திரன் ஐரோப்பிய யூனியனையும் அமெரிக்காவையும் திருப்திப்படுத்தவும் அதற்கு போட்டியாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், முன்னாள் வடமாகான முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் மற்றும் சிவில் அமைப்புக்கள் என பல கூறுகளாக பிரிந்து ஐக்கிய நாடுகள் சபைக்கு கடிதம் அனுப்புகின்றனர்.

இவ்வாறு பல கூறுகளாக பிரிந்து இருப்பவர்கள் மட்டக்களப்பிற்கு வந்து உபதேசம் செய்கின்றார்கள்.ஆகையால் யார் முதலில் ஒன்றுபடவேண்டும் என்பதை அவர்கள் சிந்திக்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எத்தனை மூடை நெல் இருக்கின்றது,எத்தனை மூடை அரிசி இருக்கின்றது என்பதை பார்க்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திருக்கின்றது.திட்டமிட்ட சதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அரிசியை 120 ரூபாவுக்கு விற்பது என்பது ஒரு அடாத்தான விடயமாகவே பார்க்கின்றோம்.

அதேவேளை, மட்டக்களப்பில் டெல்டா வேரியன் 88 வீதம் அதிகரித்துள்ளது.எனவே பொதுமக்கள், இளைஞர்கள் பொது இடங்களில் கூடுவது, வர்த்தக நிலையங்களில் கூடுவது மற்றும் அநாவசியமாக வீதிகளில் நடமாடுவதை தவிர்த்து வீடுகளை விட்டு வெளியேறாது சுகாதார துறையினரின் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி செயற்படுமாறு கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

# சுபோதினி திட்டத்தை அமைச்சரவையில் அங்கீகரித்து சுற்றறிக்கை மூலம் வெளிப்படுத்தும் வரை போராட்டம் தொடரும்!

ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கை நிறைவேற வேண்டுமானால் எங்களுக்கு சுபோதினி திட்டத்தை அமைச்சரவையில் அங்கீகரித்து அதனை சுற்றறிக்கை மூலம் அறியத்தர வேண்டும். இதுவே எமது கோரிக்கை. இந்தக் கோரிக்கை நிறைவேறும் வரை எமது போராட்டம் தொடர்ந்து செல்லும் என இலங்கை அரசாங்க ஆசிரியர்களின் சங்கத்தின் வடக்கு கிழக்கு மாகாண செயலாளர் ஜீ.ருபேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஆசிரியர் இல்லமொன்றில் வியாழக்கிழமை (9ம் திகதி) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கமானது இந்த நிகழ்நிலை கல்வியை கற்பிப்பதற்கு ஆசிரியர்களுக்கு ரூபா 5000 வீதம் இரண்டு மாதம் நிவாரண கொடுப்பனவு வழங்குகின்றார்கள்.

இந்த பணத்தினை நிகழ்நிலை கல்வியைப் பெற முடியாமல் இருக்கின்ற மாணவர்களின் நலனுக்காக பயன்படுத்துமாறு அரசிடம் கோரிக்கை விடுக்கின்றோம். இந்த கொடுப்பனவை எதிர்பார்த்து நாங்கள் நிகழ்நிலை கல்வியை நிகழ்த்த வில்லை.

எமக்கு இந்த கொடுப்பனவு தேவையில்லை. எங்களுக்குத் தேவை சம்பள முரண்பாட்டிற்கான தீர்வு மாத்திரமே. மேலும் இந்த அரசாங்கமானது இந்த போராட்டத்தை நிறுத்துவதற்கு பல வழிகளிலும், பல வகைகளிலும் முயற்சி செய்துவருகின்றது இதற்கு உடந்தையாக சில அரசு சார்பானவர்கள் மும்முரமாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எனினும் பல இன்னலான சூழ்நிலைகளுக்கு முகம் கொடுத்தாலும் ஆசிரியர்கள் தங்களுடைய போராட்டத்தை என்றும் நிறுத்தப் போவதில்லை. வடக்கு கிழக்கில் ஆசிரியர்கள் கற்பிக்கின்றார், சேவையில் ஈடுபடுகின்றார்கள் என இந்த அரசாங்கம் கூறுகின்றது.

இந்த அரசாங்கத்திற்கு ஒன்றை கூறிக் கொள்ள விரும்புகின்றேன் நான் இந்த ஊடக சந்திப்பை கிழக்கு மண்ணில் இருந்தே வழங்கிக் கொண்டிருக்கின்றேன். அரசாங்கத்தின் பாரிய அழுத்தங்களுக்கு மத்தியிலும் எங்களுடைய கிழக்கு ஆசிரியர்களும் போராட்டத்தில் பூரண பங்களிப்புச் செய்கின்றார்கள்.

எனவே அரசின் இத்தகைய கூற்றானது இன முரண்பாடுகளை தோற்றுவித்து அதன் மூலமாக ஆசிரியர் போராட்டத்தை சிதைக்க முடியும் என்கின்ற உள்நோக்கத்தின் வெளிப்பாடாகும். அத்தோடு நாங்கள் அனைவரும் வடக்கு கிழக்கு என்று அல்லாது நாடு பூராகவும் இருக்கின்ற ஆசிரியர்கள் அனைவரும் ஒற்றுமையாக இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து கொண்டிருக்கின்றோம் என்பதனையும் கூறிக் கொள்கிறேன்.

## களுவாஞ்சிகுடியில் கோகுலரஞ்சனால் வடிவமைக்கப்பட்ட உழவு இயந்திரம்



(ரக்ஸனா)

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மனிதன் ஏதோ ஒரு வித்தில் பல்துறைசார்ந்து முன்னேறிக் கொண்டுதான் இருக்கின்றான். தற்கால கொவிட் 19 காலத்திலும் சில முயற்சியுடையோர் வீட்டில் முடங்கிக் கிடக்காமல் தமது பொழுதை வீணாகக் கழிக்காமல் அவற்றை மிகுந்த பிரயோசனமாகப் பயன்படுத்துபவர்களும் தற்காலத்தில் இருக்கத்தான் செய்கின்றனர்.

எனினும் கண்டு பிடிப்புக்களுக்கும், புதிய புதிய உற்பத்திகளுக்கும், இறக்குமதிகளுக்கும், சர்வதேசத்தையே நம்பியிருக்கும் நம் இலங்கையில் ஆங்காங்கே எங்கேயே மூலை முடுக்குகளில் தத்தமது திறமைகளைக் காண்பித்து, புதிய புதிய கண்டு பிடிப்புக்களையும், உற்பதிகளையும் வெளிக்காட்டுபவர்களாக நாம்நாட்டு கண்டு பிடிப்பானர்கள், இருக்கத்தான் செய்கின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்று பிரசேத்திலுள்ள களுவாஞ்சிகுடி கிராமத்தைச் சேர்ந்த கண்டுபிடிப்பாளர்தான் கந்;தசாமி கோகுலரஞ்சன். சிறிய வயதிலிருந்தே தொழில் நுட்பத்துறையில் ஆர்வமான இவர், மத்திய கிக்கு நாடுகளில் கணிணி திருதினராக தகுந்த வேதனத்திற்கு தொழில் புரிந்து வந்துள்ளார். தற்போது வீட்டிலிருந்து கொண்டு பல கம்பனிகளுக்கும், நிறுவனங்களுக்குமுரிய கணிணிகளைப் பழுது பார்த்துக் கொடுத்து வருவதாக தெரிவிக்கும் அவர் தற்கால கொவிட் 19 காலத்தில் கணிணி திருத்தும் வேலைகள் குறைவடைந்துள்ளதால் 45 நாட்களில் சுமார் 4 இலசட்சம் ரூபா செவு செய்து கழிவுப் பொருட்களைக் கொண்டு புதிய ரக உழவு இயந்திரம் ஒன்றைக் உருவாக்கி கண்டு பிடித்துள்ளதாகத் தெரிவிக்கின்றார்.

விவசாயக் கிராமத்தில் பிறந்ததாலும், விவசாயத்தில் அதிக நாட்டமுள்ளதாலும், தாம் எவரிடமும் கையேந்தாமல் விவசாயிகளுக்கு புதிய உழவு இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற நோக்குடன் செயற்பட்டுதான் இவ்வுழவு இயந்திரக்தைக் கண்டுபிடித்துள்ளதாகவும், இதற்கு அரச அங்கீகரம், மற்றும் பதிவுச் சான்றிழ் போன்றவற்றைப் பெற்றுத்தர அரசாங்கம் உதவவேண்டும் எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

கோகுலராஞ்சன் புதிதாக வடிவமைத்துள்ள சிறியரக உழவு இயந்திரத்தை அப்பகுதி மக்கள், மற்றும் விவசாயிகள் அனைவரும் பார்வையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மட்டக்களப்பில் சதோச விற்பனை நிலையம் திறந்துவைப்பு







மட்டக்களப்பு மாவட்ட மக்களிற்கு நிவாரண விலையில் சதோச ஊடாக அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக சதோச விற்பனை நிலையம் ஒன்று நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாட்டினை நிவர்த்திப்பதற்காக அரசாங்கத்தினால் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுத்துவருவதுடன், சதோச வர்த்தக நிலையத்தின் ஊடாக மக்களுக்கு தேவையான அனைத்து விதமான அத்தியாவசிய தேவைக்கான பொருட்களையும் நிவாரண விலையில் வழங்கிவருகின்றனர்.

வாணிக வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டபோது மட்டக்களப்பு நகர் பகுதி உள்ளிட்ட சில இடங்களில் சதோச திறக்கப்பட்டு மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தையும் நிவாரண விலையில் பெற்றுக்கொடுக்கப்படுமென வழங்கிய வாக்குறுதிக்கு அமைவாக இந்த சதோச விற்பனை நிலையம் திறந்துவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு, கள்ளியங்காடு உணவுக் களஞ்சியசாலையில் சத்தோச விற்பனை நிலையமானது திறந்துவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சதோச நிறுவனங்களின் தலைவர் ரியல் அட்மிரல் ஆனந்த பீரிஸ், மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட உதவி அரசாங்க அதிபர் அ.நவேஸ்வரன், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த சதோச விற்பனை நிலையம் ஊடாக சில்லறை மற்றும் மொத்த வியாபாரிகளுக்கான பொருட்களும் வழங்கப்படவுள்ளதுடன் இதன் மூலம் மாவட்டத்தில் எதிர்காலத்தில் எந்த வித பற்றாக்குறையும் இல்லாமல் மக்களுக்கு பொருட்களை விநியோகிக்க கூடிய நிலையுள்ளது.

## சேதனப் பசளை பயன்பாட்டினை ஒவ்வொரு வீடுகளிலும் முன்னெடுக்க வேண்டும்

### கல்முனை பிரதேச செயலாளர் தெரிவிப்பு





(எல்.எம்.ஷினாஸ் )

ஜனாதிபதியின் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நஞ்சுத் தன்மை அற்ற உணவு உற்பத்தியை உருவாக்கும் நோக்குடன் தற்போது நாட்டில் சேதனப் பசளை உற்பத்தி வேலைத்திட்டம் பிரதேச செயலகங்கள் ஊடாக விரிவுபடுத்தப்பட்டுள்ளதன.

ஒவ்வொரு வீடுகளிலும் இதனை முன்னெடுக்க பங்காளிகளாக மாற வேண்டும் என்று கல்முனை பிரதேச செயலாளர் ஜெ. லியாக்கத் அலி தெரிவித்தார்.

மருதமுனை நற்பிட்டிமுனை சமுர்த்தி வங்கி ஏற்பாடு செய்த ‘சமுர்த்தி அருணலு’ வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்தினை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று(09) வங்கி முகாமையாளர் சட்டத்தரணி எம்.எம். எம்.முபீன் தலைமையில் மருதமுனையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதேச செயலாளர் இவ்வாறு தெரிவித்தார் தொடர்ந்தும் உரையாற்றும்போது,

பொது மக்களின் எதிர்கால ஆரோக்கியத்தில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. இதற்கென பல மில்லியன் ரூபாய்களை செலவு செய்து வருகிறது. சேதனப் பசளை உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கு மானிய அடிப்படையில் 5 லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது. சேதனப் பசளை உற்பத்தி தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது நாட்டில் முன்னெடுக்கப்படும் சேதனப் பசளை உற்பத்தி தேசிய வேலைத்திட்டத்தில் சமுர்த்தி பயனாளிகள் பங்காளிகளாக மாற வேண்டும். எதிர்காலத்தில் நஞ்சுத் தன்மையற்ற உணவு உற்பத்தி ஒவ்வொரு வீடுகளிலும் முன்னெடுக்கப்பட வேண்டும். என்றும் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

நிகழ்வின்போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகள் மற்றும் பழ பயிர் விதைகள் வழங்கிவைக்கப்பட்டதுடன் சேதனப் பசளை பயன்பாடு தொடர்பாக அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

## தேசிய வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை வேலைத்திட்டம் ஆரம்பம்





(பாறுக் ஷிஹான்)

சமுர்த்தி குடும்பங்களின் பொருட்டு நடைமுறைப்படுத்தப்படும் செளபாக்கியா தேசிய வீட்டுத்தோட்ட பயிர்செய்கை வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகிறது.

இதனடிப்படையில் அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட சமூர்த்தி வங்கி நான்கு வலயங்களிலும் தெரிவு செய்யப் பட்ட சமூர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகள் மற்றும் விதை பக்கட்கள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று சம்மாந்துறை சமூர்த்தி தலைமை பீட முகாமையாளர் யு.எல்.எம் சலீம் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் அதிதிகளாக சம்மாந்துறை உதவி பிரதேச செயலாளர் யு.எம் அஸ்லம், சம்மாந்துறை பிரதேச செயலக கணக்காளர் ஐ.எல் பாரிஸ், திட்ட முகாமையாளர், வலய முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர்களின் ஆகியோர் கலந்து கொண்டு விதை பக்கெட்டுகள் மற்றும் தென்னங் கன்றுகளை பயனாளிகளுக்கு வழங்கி வைத்தனர்.

## மன்னாரில் கோவிட் தடுப்பூசி பெறாதவர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படுகின்றது

(வாஸ் கூஞ்ஞ)

கொவிட் 19 க்கான முதலாவது தடுப்பூசி 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கும்; இவ்வேளையில் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் இது வரை இவ் தடுப்பூசியை பெறாதிருந்தால் காலம் தாழ்த்தாது உடன் இவ் தடுப்பூயை ஏற்றிக்கொள்ளும்படி மன்னார் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ் தடுப்பூசியை பெறாதவர்கள் அடுத்த மாதம் தொடக்கம் வெளியில் நடமாட தடை விதிக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் சகல சுகாதார வைத்திய அதிகாரிகளின் பிரிவுகளிலும் கொவிட் 19 தொற்று நோய்க்கான சினோபாம் தடுப்பூசிகள் தற்பொழுது தொடர்ந்து வழங்கும் நடவடிக்கைகள் இடம் பெற்றுக் கொண்டிருப்பதாக சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

30 வயதுகளுக்கு மேற்பட்டவர்களுக்கு அதாவது ஏற்கனவே இவ் தடுப்பூசிகள் பெறாதவர்களுக்கான நடவடிக்கைகளாக இவை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இவ் தடுப்பூசியை பெறாதவர்கள் தட்டிக்கழிக்காது காலம் தாழ்த்தாது இவற்றை போட்டுக்கொள்வதில் ஆர்வம் காட்ட வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் எந்த மாவட்டத்தவர்களாக இருந்தாலும் சினோவாம் தடுப்பூசிகளை இங்கு போட்டுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் தொடக்கம் இவ் தடுப்பூசிகளை போடாதவர்கள் வெளியில் நடமாட அனுமதிக்கப்பட மாட்டார்கள் என சுகாதார பிரிவு எச்சரிக்கை விடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.



Sj SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


SwissLife Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079  889 60 65


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# நெல்,அரிசி களஞ்சியப்படுத்தல் எமது ஜீவனோபாயம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அழிக்க வேண்டாம்

## திருமலை விவசாயிகள்,அரிசி ஆலை உரிமையாளர் ஆதங்கம்

**திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்**



திருகோணமலை மாவட்டத்தில் கடந்த நாட்களில் நெல் களஞ்சிய சாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பெருமளவிலான நெல் மூட்டைகள் சீல் வைக்கப்பட்டன.

இது தொடர்பாக நேற்றைய தினம் அரசாங்கத்தின் நிர்ணய விலைக்கு மற்றும் அரசுடமையாக்கப்படல் சம்பந்தமாக கலந்துரையாடல் ஒன்று திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்றது

இதன்போது அரிசி ஆலைகளின் களஞ்சியசாலைகள் உட்பட விவசாயிகளின் களஞ்சிய சாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்ட நெல் மூட்டைகள் சீல் வைக்கப்பட்டதுடன் நேற்றைய தினம் இது தொடர்பாக திருகோணமலை மாவட்ட அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் மற்றும் விவசாயிகள் ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

இவ் ஊடக சந்திப்பில் அரசியலை உரிமையாளர் ஒருவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள நெல் களஞ்சிய சாலைகள் சீல் வைக்கப்பட்டன பின்னர் நேற்றைய தினம் மாவட்ட அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கிணங்கி கலங்கிய படுத்தப்பட்ட நெல் சம்பந்தமாக ஒரு இணக்கப்பாட்டின் கீழ் களஞ்சியப்படுத்தப்பட்ட நெல்லினை அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலைக்கு வழங்குவதற்கு ஏகமனதாக தீர்மானித்துள்ளோம்.

இவ்வாறு களஞ்சியப்படுத்தபட்டுள்ள நெல் மூட்டைகள் அனைத்தும் வங்கிகளில் கடன்களை பெற்று கொள்வனவு செய்யப்பட்ட நெல் மூட்டைகள் என்பதாகவும்,கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இந்த நெல் களஞ்சியப்படுத்தல் அரிசி தீட்டுதல் போன்ற தொழிலில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் குச்சவெளி திருகோணமலை போன்ற பிரதேசங்களில் இவ்வாறான சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு நெல் களஞ்சியசாலைகள் சீல் வைக்கப்பட்டதைப்போன்று ஏனைய மாவட்டங்களில் உதாரணமாக பொலனறுவை போன்ற மாவட்டங்களில் பெரும் அளவிலான நெல் களஞ்சிய சாலைகள் காணப்படுவதக்கவும் அவ்வாறான நெல் களஞ்சிய சாலைளையும் சோதனை செய்து பார்த்தால் எம்மைப்போன்று சிறிதளவு நெல் களஞ்சியப்படுத்தபட்டு அரசி உற்பத்தியில் ஈடுபடுவோருக்கு பாதிப்பு ஏற்படாது என்றும் அரிசி ஆலை உரிமையாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

மேலும் விவசாயி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்...

திருகோணமலை மாவட்டத்தின் பின்தங்கிய கிராமமான கோமரங்கடவல பிரதேசத்தில் விவசாயத் தொழிலை ஜீவனோபாயமாக செய்திருவருவதாகவும் மாவட்டத்தில் ஏனெனில் நெல் களஞ்சியசாலைகள் சீல் வைக்கப்பட்டது போன்று தமது நெற்களஞ்சியசாலையும் சீல் வைக்கப்பட்டதாகவும் தெரிவித்த விவசாயி

சுமார் 8 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் தாம் விவசாயம் செய்து வந்ததாகவும் அதில் விளைவித்த நெல்லினையே தாம் களஞ்சியப்படுத்தி வைத்ததாகவும் கடந்த நாட்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் தமது நெற்களஞ்சிய சாலையும் சீல் வைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அவ்வாறு களஞ்சியப்படுத்தபட்டிருந்த நெல் தமது எட்டு ஏக்கர் நிலப்பரப்பில் எதிர்வரும் பெரும்போகத்திற்கு விதை நெல்லாகவும்,தமது குடும்பத்திடற்கு உணவிக்காகவும் மேலும் தமது வாழ்வாதரத்தை முன்னெடுக்க அந் நெல்லினை அரிசி ஆலைகளில் நெல்லாகி விற்றபனை செய்து வருவதற்ககவும் வைத்திருந்ததாக தெரிவித்தார்.

மேலும் சாதாரணமாக எட்டு ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்யும் விவசாயி ஒருவருக்கு போதுமான நெல்லினையே தாம் களஞ்சியப்படுத்தி வைத்திருந்ததாகவும் அவ்வாறு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த களஞ்சியசாலை சீல் வைக்கப்பட்டிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று எனவும் இதன்போது கருத்து தெரிவித்தார்.

இவ்வாறு சீல் வைக்கப்பட்ட களஞ்சியசாலை கடந்த நாட்களில் ஊடகங்களில் காட்டியதாகவும் இதன்போது அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்கள் விவசாயிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்றப்படாத வண்ணம் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டதாக ஊடகங்களில் செய்தி வெளியானதை தாம் அறிந்ததாகவும் அதனடிப்படையில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு பாதிப்பின்றி விவசாயத்தினை மென்மேலும் முன்னோக்கி செல்ல திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இதன்போது வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வேர்ல்ட் விசன் நிறுவனத்தினால் 80 கட்டில்கள் வழங்கி வைப்பு





**(ஏ.பி.எம்.அஸ்ஹர்)**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி சுகுணனின் வேண்டுகோளுக்கிணங்க வேர்ல்ட் விஷன் நிறுவனத்தினால் பிராந்தியத்திற்கு உட்பட்ட வைத்தியசாலைகளுக்கு 80 கட்டில்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கொவிட் 19 தொற்று பரவல் நிலைமையயடுத்து கல்முனைப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள நோயாளர்களுக்கான கட்டில்கள் தட்டுப்பாடு குறித்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி சுகுணன் எடுத்துக்கொண்ட முயற்சியின் பலனாக இந்த கட்டில்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதன் படி சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான 80 / கட்டில்கள் கல்முனை பிராந்தியத்திற்குட்பட்ட அக்கரைப்பற்று திருக்கோவில் பாலமுனை சாய்ந்தமருது மருதமுனை மற்றும் அண்ணமலை ஆகிய 5 வைத்திய சாலைகளுக்கு இவை வழங்கிவைக்கப்பட்டன.

இது தொடர்பான நிகழ்வு இன்று புதன் கிழமை அட்டாளைச்சேனை அல் ஷகீ பெங்குட் மண்டபத்தில் இடம் பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி சுகுணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய திட்டமிடல் வைத்திய அதிகாரி டாக்டர் எம் சி மாஹிர், பாலமுனை பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஏ எம் நௌபல், சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எம் எச் சனூஸ் காரியப்பர் உட்பட வைத்திய அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# கொரோனாவை சுதேச வைத்தியத்தின் மூலம் கட்டுப்படுத்த தகுதி வாய்ந்த 1000 வைத்தியர்கள் வேலைவாய்ப்பின்றி வீட்டில்

**அ . அச்சுதன்**

ஆயுர்வேத, சித்த, யுனானி வைத்திய துறைகளில் பட்டம் பெற்று உள்ளக பயிற்சிகளை நிறைவு செய்த 1000 வைத்தியர்கள் கடந்த 2017 ஆம் ஆண்டில் இருந்து அரச நியமனம் கிடைக்காமல் வேலைவாய்ப்பற்ற நிலையில் வீட்டில் இருக்கும் துர்ப்பாக்கிய நிலை நம் நாட்டில் மட்டும் இருப்பது கவலைக்குரிய விடயமாகும் என வேலைவாய்ப்பற்ற சித்தவைத்திய சங்கத்தின் தலைவர் வைத்தியர் ஹபில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போதைய கொரோனா இடர் காலத்தை கருத்தில் கொண்டு சுகாதார துறையை வலுப்படுத்த வேலையற்ற சுதேச வைத்தியர்களுக்கு அரச நியமனம் வழங்கி கொரோனா சிகிச்சை நிலையங்களில் சேவையாற்ற வழி செய்வதே அரசின் புத்திசாலித்தனமானதும் ஆரோக்கிய மானதுமான முடிவாகும் என நினைக்கிறேன்.

மேலும் இது தொடர்பாக சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் கௌரவ சிசிர ஜயகொடி அவர்களுடன் பல முறை பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டும் அது பலனளிக்கவில்லை. மற்றும் அதிமேதகு ஜனாதிபதி மற்றும் பிரதம மந்திரி ஆகியோரின் அலுவலகங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டும் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை.

மாறாக அலோபதி துறையில் உள்ளக பயிற்சியை தொடங்காத மாணவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருப்பது மிக்க வேதனை அளிக்கிறது.

நாட்டு மக்களின் வரிப்பணத்தில் இலவச கல்வியை கற்று சுகாதார துறையில் தேர்ச்சி பெற்ற வைத்தியர்களாகிய எமக்கு உடனடியாக அரச நியமனம் வழங்கி நாட்டு மக்களுக்கு புத்துணர்ச்சியுடன் சேவையாற்ற உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

# கட்டுரை போட்டிக்கான முடிவுகள்

**(ஏ.பி.எம்.அஸ்ஹர்)**

பாலமுனை ஹெல்த் போரம் அமைப்பினால் கொரோனா நோயினை கட்டுப்படுத்துவதில் தடுப்பூசி பாவனையின் முக்கியத்துவம் எனும் தலைப்பில் பாலமுனையை சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட கட்டுரை போட்டிக்கான முடிவுகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

இதன் படி கனிஷ்ட பிரிவில் (தரம் 5 தொடக்கம் 8 வரை)

முதல் இடம் 5,000 ரூபாய் பணப் பரிசும் சான்றிதழும் பெறுபவர் பாலமுனை மின்ஹாஜ் தேசிய பாடசாலை மாணவன் அமீர் மொஹமட் பிர்னாஸ் (தரம் 6)

இரண்டாம் இடம் 3,000 ரூபாய் பணப் பரிசும் சான்றிதழும் பெறுபவர் பாலமுனை அல்ஹிதாயா வித்தியாலய மாணவி முஹம்மது அன்சார் அலிஷா லாமிஸ் ( தரம் 6)

மூன்றாம் இடம் 1,000 ரூபாய் பணப் பரிசும் சான்றிதழும் பெறுபவர் பாலமுனை அல்ஹிதாயா வித்தியாலய மாணவி அமீர் பாத்திமா நுஹா (தரம் 7)

உயர் பிரிவில் (தரம் 9 தொடக்கம் 13 வரை)

முதல் இடம் 5,000 ரூபாய் பணப் பரிசும் சான்றிதழும் பெறுபவர் பாலமுனை அல்-ஹிக்மா வித்தியாலய மாணவி பாறூக் பாத்திமா சஸ்னி (தரம் 11)

இரண்டாம் இடம் 3,000 ரூபாய் பணப் பரிசும் சான்றிதழும் பெறுபவர் பாலமுனை அல்ஹிதாயா வித்தியாலய மாணவி அப்துல் கபூர் பாத்திமா றிலா (தரம் 9)

மூன்றாம் இடம் 1,000 ரூபாய் பணப் பரிசும் சான்றிதழும் பெறுபவர் பாலமுனை அல்ஹிதாயா வித்தியாலய மாணவி உமர்கத்தா நிபா (தரம் 10)

மேலும் சிறந்த கட்டுரைகளை வழங்கிய 25 மாணவர்களுக்கு சிறப்பு சான்றிதழும் வழங்கப்படும்.

மேலே குறிப்பிட்ட மாணவர்களுக்கான பரிசுத் தொகையும் சான்றிதழும் அவர்களின் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# 1822 குடும்பங்களுக்கு சமுர்த்தி வீட்டுத் தோட்ட வேலைத் திட்டம்



**(வி.ரி.சகாதேவராஜா)**

காரைதீவு பிரதேச செயலகப்பிரிவுக்கான, சமூர்த்தி வீட்டுத் தோட்ட வேலைத் திட்டம் உத்தியோகபூர்வமாக நேற்று(9) வியாழக்கிழமை காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தலைமையில் இவ்வேலைத்திட்டம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.காரைதீவு சமுர்த்தி வங்கி சங்கத்தினரும் ,மக்களும் இணைந்து தெரிவுசெய்யப்பட்ட வீடுகளில் வேலை திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.கரடித்தோட்டம் சமுர்த்தி வங்கி அனுசரணையில் நடைபெற்ற இவ்வேலைத் திட்டத்துக்காக 1822 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டன.

# ஊரடங்கு சட்ட நேரத்தில் சுற்றுலா விடுதியில் சட்டவிரோத சாராய விற்பனை:ஒருவர் கைது–சாராய போத்தல்கள் மீட்பு

**(ரீ.எல்.ஜவ்பர்கான் மட்டக் களப்பு)**



தனிமைப் படுத்தல் ஊரடங்குச் சட்டத்தைப் பயன்படுத்தி சுற்றுலா விடுதியில் சட்டவிரோதமான முறையில் சாராயம் விற்பனை செய்த சம்பவமொன்று மட்டக்களப்பு கல்லடியில் இடம் பெற்றுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட குற்வி விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

நேற்று முன்தினமிரவு 11.30 மணியளவில் கடற்படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து குற்ற விசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரி பண்டார தலைமையிலான பொலிஸ் அதிகாரிகள் நடாத்திய திடீர்சுற்றிவளைப் பின்போது மட்டக்களப்பு வாவியூடாக படகுகளின் மூலம் சட்டவிரோதமான முறையில் சாராய விற்பனை இடாம்பெற்று வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட சிரெஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் பணிப்புரையின் பேரில் குறித்த சுற்றுலா விடுதியிலிருந்து சட்டவிரோதமான முறையில் விற்பன செய்யப்பட்ட 73 சாராய போத்தல்களுட ஒருவர் கைது செய்யட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளார்

# அன்டிஜன் பரிசோதனையில் மூன்று நபருக்கு கொரோனா தொற்று

கிரான் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் மூன்று நபருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினர் தெரிவித்தார்.

கிரான் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் பொதுமக்கள் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கற் என பதினேழு நபர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் மூன்று நபருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ரி.திவாகரன் தலைமையில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஆர்.இன்பராஜாவின் மேற்பார்வையில் இடம்பெற்ற பரிசோதனையில் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

# 241 வது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி ஆயுள்வேத ஆராய்ச்சி வைத்தியசாலைக்கு விஜயம்

**(நூருல் ஹுதா உமர்)**



கொரோணா தொற்று பரவல் நிலைமை தற்போது தீவிரமடைந்து வருவதால் இது குறித்து மக்களுக்கு விழிப்பூட்டும் செயல்பாடுகளை நிந்தவூர் அரசாங்க ஆயுள்வேத ஆராய்ச்சி தொற்றா நோய் வைத்தியசாலை தொடர்ந்தும் மேற்கொண்டுள்ளது.

இதன் ஒரு அங்கமாக நிந்தவூர் அரசாங்க ஆயுள்வேத ஆராய்ச்சி தொற்றா நோய் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் கே எல் நக்பரின் அழைப்பின் பேரில் அம்பாறை மாவட்ட 241 வது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி கேணல் ஏ.எம்.சி. அபயகோன் நிந்தவூர் அரசாங்க ஆயுள்வேத ஆராய்ச்சி தொற்றா நோய் வைத்தியசாலைக்கு விஜயமொன்றை மேற்கொண்டு வைத்தியசாலை நடவடிக்கைகளை பார்வையிட்டார்.

இதன்போது அம்பாறை மாவட்டம் முழுவதிலும் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன விழிப்பூட்டும் செயற்பாடுகள் தொடர்பிலும் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வகையில் 'சுவதரணி' மருத்துவ பானங்களும் வழங்கி வைக்கப்பட்டு வருவது தொடர்பிலும் கேட்டறிந்து கொண்ட 241 வது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி கேணல் ஏ.எம்.சி. அபயகோன் நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்திய சாலையின் பணிப்பாளர் டாக்டர் கே எல் நக்பர் தலைமையிலான வைத்தியசாலை ஊழியர்களை பாராட்டியதுடன் மேலும் இந்த பணியை தொடர்ந்து செய்து மக்களை விழிப்பூட்டும் வழிவகைகள் தொடர்பிலும் ஆராய்ந்தார்.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com



உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


“கல்விக்கு கைகொடுப்போம்”
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன்
உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை
கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள்
அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள் மற்றும்
அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார்
நிறுவனங்களுக்கு விசேட
விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து
அனுப்பப்படும் பொதிகளையும்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


Call us now!
0791023193
0787437071
MON-FRI
11.30 - 23.30
SATURDAY
11.30 - 23.00
SUNDAY
11.30 - 18.00
GRUNAU 1
ASIAN FOOD
RESTAURANT
STARTER
BBQ
GRILL-TANDOORI
SPECIAL NAAN
MIX SABJI
BIRIYANI SPL
CURRY DISHES
FISH SPL
DESERTS - ICE CREAM
COFFEE SPL
CALL WE DELIVER YOU - STAY HOME STAY SAFE
MEIERWISSENSTR 588064 ZURICH

# கொவிட் நடவடிக்கைகள்

# சுவிற்சர்லாந்து அரசின் புதிய அறிவிப்புக்கள்



(தொகுப்பு: சிவமகிழி)

எதிர்வரும் 13.09.21 திங்கள்முதல் மகுடநுண்ணித் தொற்றிற்கு (கோவிட்) தடுப்பூசி இட்டுக் கொண்டவர்களும், தொற்றுநோயிலிருந்து குணம் அடைந்தவர்களும், நோய்த்தொற்றுப் பரிசோதனை செய்துகொண்டவர்களும்மட்டுமே பொது வாழ்விடங்களில் நுழையலாம்.

16 வயதிற்கு உட்பட்டோருக்கு இச்சான்றிதழ் காட்டவேண்டிய கட்டாயத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## தடுப்பூசிச்சான்று எத்துறைகளுக்கு கட்டாயமாக்கப்படுகின்றது?

தங்குவிடுதிகளின் உள்ளரங்குகளில், மதுநிலையங்கள் மற்றும் உணவகங்கள், அதுபோல் பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு நிலையங்கள், நாடக அரங்கு, திரையரங்கு, சூதாட்ட விடுதிகள், நீச்சல்நிலையங்கள், அருங்காட்சியங்கள், விலங்குகாட்சிசாலை, இதுபோன்றவற்றிக்கும் தடுப்பூசி சான்று கட்டாயமாக்கப்படுகின்றது.

உள்ளரங்குகளில் நடைபெறும் நிகழ்வுகளும் (இசைக்கச்சேரி, விளையாட்டு நிகழ்வு, மன்ற நிகழ்வுகள், பொது இடத்தில் நடைபெறும் தனியார் திருமண விழாக்கள், என்பனவற்றிற்கு தடுப்பூசி சான்றிதழ் எதிர்காலத்தில் கட்டாயமாகும்.

## விலக்கு உண்டா?

பொதுப்போக்குவரத்து, வணிகநிலையங்கள், மற்றும் வானூர்திநிலையங்களில் புடைபெயர்வு (ரிறன்சிற்) பகுதிகளுக்கும் தனியார் இடங்களில் 30 ஆட்களுக்கு உட்பட்டு நடைபெறும் நிகழ்வுகளுக்கும் தடுப்பூசி சான்று வைத்திருக்க வேண்டும் என்பதில் விலக்கு அளிக்கப்படுகின்றது.

அதுபோல் சமயவழிபாடு மற்றும் அரசியல் கருத்தினை வெளிப்படுத்தும் அரசியல் பேரணிகளுக்கும் 50 ஆட்களுக்கு உட்பட்டு இருப்பின் தடுப்பூசி சான்று தேவையில்லை.

பாராளுமன்றக் கூட்டங்களுக்கும், ஊராட்சி மன்றக்கூட்டங்களுக்கும் விதிவிலக்கு அளிக்கப்படுகின்றது.

தனிநபர்கள் அரசசெயலகங்களில் பயனாளிகளாக செல்லும்போதும், அதுபோல் தனி ஆட்கள் நாளாந்த செயற்பாடுகளில், எடுத்துக்காட்டாகமுடிதிருத்த நிலையம், மருத்துவ தேவை, மதியுரை வேண்டுகை, சமூக நிலையங்களில் விருந்தோம்பல் பணிகளுக்கு தடுப்பூசிச் சான்று தேவையில்லை.

## விளையாட்டு மற்றும் பண்பாட்டுச் செயற்பாடுகள்?

உள்ளரங்குகளில் நடைபெறும் உடற்பயிற்சி அல்லது இசை நாடக ஒத்திகைகளில் ஒரு இடத்தில் ஆகக்கூடியது 30 ஆட்களுக்கு உட்பட்டு இருப்பின் தடுப்பூசி சான்று தேவையில்லை.

அதுபோல் பல அறைகள் போதிய இடைவெளியுடன் இருப்பின் ஒரு அறைக்குள் 30 ஆட்கள் எனப் பிரிக்க வாய்ப்பு இருப்பின் அவர்கள் தடுப்பூசிச்சான்றிதழ் முறையைக் கடைப்பிடிக்க தேவையில்லை.



## 01.10.2021 முதல் கட்டணம்

தடுப்பூசி இடாதோர் பொதுநிகழ்வுகளில் பங்கெடுக்க முடியாது, அவர்கள் தொடர்வினை விளைபொருள் (பி.சீ.ஆர்) பரிசோதனை ஊடாக தமக்கு தொற்று இல்லை என்பதை உறுதிசெய்தால் மட்டுமே பொது வாழ்விடங்களுக்கு செல்லலாம்.

அவ்வாறு பரிசோதனை செய்வதற்கு இதுவரை சுவிஸ் அரசு கட்டணத்தை ஏற்றுவந்தது. ஆனால் 01.10.21 முதல்இக்கட்டணங்களை பரிசோதனை செய்பவரே முழுமையாக செலுத்த வேண்டும்.

மகுடநுண்ணித் தொற்று ஏற்பட்டிருப்பாதாக மருத்துவமனையோ மருத்துவரோ ஐயம்கொண்டு எவருக்காவது பரிசோதனை செய்தால் அதற்கான செலவை சுவிஸ் அரசு ஏற்றுக்கொள்ளும், ஆனால் அவர்களுக்கு தொற்றுப்பரிசோதனை செய்தமைக்கு சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

16 வயதிற்கு உட்பட்டவர்களுக்குமகுடநுண்ணித் தொற்று விரைவுப்பரிசோதனை தொடர்ந்து கட்டணமற்று வழங்கப்படும், கட்டணத்தினை சுவிஸ் அரசு ஏற்றுக்கொள்ளும்.

## தொழிலிடங்களில் தடுப்பூசிச்சான்று தேவையா?

தொழிலிடங்களில் உணவுவிடுதி உட்பட சான்றிதழ் கட்டாயம் கிடையாது. பணிசெய்வோரும் தடுப்பூசி சான்றிதழ் காட்டத் தேவையில்லை.

ஆனால் ஒவ்வொரு நிறுவனங்களும் தமது பணியாளர்கள் உரிய தடுப்பூசி முழுமையாக இட்டுக்கொண்டனரா என்பதை உறுதிப்படுத்தும் உரிமையினை சுவிஸ் அரசு நிறுவனங்களுக்கு அளித்துள்ளது.

## தொழில் நிறுவனங்கள் தடுப்பூசி சான்றிதழ்களை பயன்படுத்தலாமா?

எடுத்துக்காட்டாக நலவாழ்வுத் துறையில், மருத்துவமனையில் பணிசெய்யும் பணியாளர் மகுடநுண்ணித் தடுப்பூசியை இட்டுக்கொண்டனரா, அதன்பயன் பயனாளர்களுக்கு உரிய காப்பு அளிக்கப்படுகின்றதாஎனும் அக்கறையில் சான்றிதழை பயன்படுத்தலாம். ஆனால் தடுப்பூசி இட்டுக் கொள்ளாதவர்களை பாகுபடுத்த நிறுவனங்கள் தடுப்பூசிசான்றினைப்பயன்படுத்தக்கூடாது என சுவிஸ் அரசு வேண்டுகை வைத்துள்ளது.

## பொதுவாழ்விடங்களில் தடுப்பூசிச்சான்று எப்போது வரை செல்லும்?

இந்நடவடிக்கை எதிர்வரும் 24. 01. 2022 வரைக்கும் முதற்கட்டமாக செல்லுபடியாகும். எதிர்வரும் நாட்கள் எப்படி அமைகின்றது என்பதே சுவிஸ் அரசின் அடுத்த கட்ட முடிவை எட்ட வழிசெய்யும். நோய்த்தொற்று கட்டடுப்பாட்டிற்குள் வந்து, மருத்துவமனையில் தங்கி வைத்தியம் செய்வோர் தொகை விரைந்து குறைவடைந்தால், இச்சான்றிதழ் கட்டாயமும் விரைந்து மீளப்பெற்றுப்கொள்ளப்படலாம்.

## தடுப்பூசி சான்று காட்டப்படும் இடத்தில் வேறு தளர்வு உண்டா?

தடுப்பூசி முழுமையாக இட்டுக்கொண்ட சான்றுடன் நடைபெறும் நிகழ்வுகளில் தற்போது நடைமுறையில் உள்ள காப்பமைவு விதியான கட்டாய முகவுறைக்கு தளர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்பொருள் நிகழ்வில் பங்கெடுக்கும் அனைவரும் முழுமையாக தடுப்பூசி இட்டுக்கொண்டது உறுதிப்படுத்தப்பட்ட இடத்தில் முகவுறை அணியத் தேவையில்லை. தற்காலத்தில் நடனவிடுதிகளிலும், பெருநிகழ்வுகளிலும்இம்முறைமை ஆயப்பட்டபோது, அங்கு தொற்றுக்கூடவில்லை என்பது ஆய்வில் உறுதிசெய்யப்பட்டுள்ளது என எடுத்துக்காட்டப்பட்டது.

## தடுப்பூசி சான்று மீறப்பட்டால் என்ன தண்டனை கிடைக்கும்?

நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தடுப்பூசி சான்றினை உறுதிப்படுத்த கடமைப்பட்டவர்கள்ஆவார்கள்.

நிகழ்வுகளில் சான்றுகள் கடைப்பிடிக்காவிடின்



விதிமீறும் ஒவ்வொருவரும் தலா 100.-பிராங்குகள் தண்டனைப்பணம் செலுத்த வேண்டும்.

நிகழ்வு ஏற்பாட்டு நிறுவனம் சுவிஸ் அரசால் நிலையாக இழுத்துமூடப்படும் வாய்ப்பும் உண்டு.

நடைபெறுகின்ற நிகழ்வுகளில் தடுப்பூசி சான்று உரியமுறையில் பரிசோதிக்கப்பட்டுபதியும் பொறுப்பினை நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் முழுமையாக கடைப்பிடிக்கின்றார்களா என்பதை கண்காணிக்கும் பொறுப்பு, சுவிற்சர்லாந்தின்நடுவனரசு மாநில அரசுகளிடம் அளித்துள்ளது!

மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்






# மன்னாரில் 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட சமூர்த்தி பயனாளிகளுக்கு வீட்டுத் தோட்டத்துக்கான உதவிக்கரம் நீட்டப்பட்டுள்ளது



வாஸ் கூஞ்ஞ

மன்னார் மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலக பிரிவுகளிலும் 153 கிராம அலுவலகப் பிரிவுகளில் ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைவாக சுமார் 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட குறைந்த வருமானம் கொண்டவர்களுக்கு வீட்டுத் தோட்டங்கள் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என மன்னார் சமூர்த்தி பணிப்பாளர் ஐ.அலியார் இவ்வாறு தெரிவித்தார்.

சமூர்த்தி வேலை திட்டங்களில் ஒன்றான ஜனாதிபதியின் கருப்பொருள் வேலை திட்டங்களில் ஒன்றாக விளங்கும் வறுமை ஒழிப்பு திட்டத்தில் நாட்டிலுள்ள சகல பிரதேசங்களிலும் வீட்டுத் தோட்டங்களை அபிவிருத்தி செய்யும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்பொழுது உள்ள நிலையில் மக்கள் தங்களுக்கான உணவுப் பொருட்களை தங்கள் வீடுகளிலேயே உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளாகவே இவ் வீட்டுத் தோட்ட செயல்பாடு அபிவிருத்தி செய்யப்படுகின்றது.

இந்தவகையில் செப்ரம்பர் மாதம் ஒன்பதாம் திகிதியிலிருந்து நாடு பூராகாவும் சமூர்த்தி செவ்பாக்கியா வீட்டுத்தோட்டம் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இவ் திட்டத்துக்கு அமைவாக சமூர்த்தியில் நன்மை பெறுகின்ற குடும்பங்கள் மற்றும் வீட்டுத் தோட்டம் செய்ய ஆர்வம் கொண்டவர்கள் அவர்களுக்கு வீட்டுத் தோட்டத்துக்குத் தேவையான மரக்கறி கன்றுகள், விதைகள் மற்றும் பழமரக்கன்றுகள் போன்றவைகள் வழங்கி மன்னாரில் வீட்டுத்தோட்டங்கள் செய்வதற்கான சகல முன்னெடுப்புகளும் மேற்கொள்ளப்பட்டு வரகின்றன.

மன்னார் மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலக பிரிவுகளான மன்னார் நகரம், நானாட்டான். முசலி, மடு மற்றும் மாந்தை மேற்கு ஆகிய 153 கிராம அலுவலகப் பிரிவுகளிலும் பயனாளிகளாகக் கொண்ட சுமார் 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட குறைந்த வருமானம் கொண்டவர்களுக்கு இவ் வீட்டுத் தோட்டங்கள் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ் திட்டமானது விவசாய திணைக்களத்தின் வழிகாட்டலுக்கு அமைவாகவும் மாவட்ட செயலாளரின் ஆலோசனைகளுக்கு அமைவாகவும் இவ் திட்டம் மன்னார் மாவட்டத்தில் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வருவதாக மன்னார் சமூர்த்தி பணிப்பாளர் ஐ.அலியார் இவ்வாறு தெரிவித்தார்.

# ஆலையடிவேம்பில் தென்னங்கன்றுகளும் மரக்கறி விதைப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டது



(வி.சுகிர்தகுமார்)

ஜனாதிபதியின் சுபீட்சத்தை நோக்கிய நாடு எனும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமும் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

இதற்கமைவாக அம்பாரை மாவட்டம் முழுவதும் தென்னங்கன்றுகள் வழங்கும் பணி மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்றாஸ் தலைமையில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட நிலையில் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரிவுகளிலும் இன்றும் இடம்பெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரனின் வழிகாட்டலில் தலைமையக முகாமையாளர் என்.கிருபாகரன் மற்றும் கருத்திட்ட முகாமையாளர் ஆர்.மதியழகன் ஆகியோரின் மேற்பார்வையில் இடம்பெற்ற தென்னங்கன்றுகள் வழங்கும் வேலைத்திட்டத்தில் உதவி பிரதேச செயலாளர் ஆர்.சுபாகர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் சிவப்பிரியா சுதாகரன் ஆலையடிவேம்பு தெற்கு மற்றும் வடக்கு வங்கியின் முகாமையாளர்களான கே.அசோக்குமார் எஸ்.சுரேஸ்காந்த் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

இதனடிப்படையில் ஆலையடிவேம்பு தெற்கு வங்கி மற்றும் வடக்கு வங்கியிலும் கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் 2580 தென்னங்கன்றுகள் வழங்கி வைக்கப்படவுள்ள நிலையில் 1935 விதைப்பொதிகளும் வழங்கப்படவுள்ளன.

இந்நிலையில் இன்று ஒரு தொகுதி தென்னங்கன்றுகளும் மரக்கறி விதைப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டதுடன் பராமரிப்பு முறைகள் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டன.

# கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு




(ஏ.பி.எம்.அஸ்ஹர்)

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை கொரோனா பிரிவுக்கு ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு சுமார் 25 லட்சம் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கடல் கடந்து வாழ் கல்முனை இளைஞர்களால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

எமது உறவுகளை பாதுகாக்க நாமும் பங்காளராவோம் எனும் தொனிபொருளில் கல்முனைக்கான வளைகுடா அமையத்தினால Non-Intensive Ventilator (CPAP Bi-PAP) - 01, Pulse oximeter - rossmax - 06 மற்றும் கல்முனை, சாய்ந்தமருது பிரதேசத்தை சேர்ந்த ஜப்பான் நாட்டில் வசிப்போரின் நிதி பங்களிப்புடன் Non-Intensive Ventilator (CPAP BiPAP) - 01 ஆகிய மருத்துவ உபரணங்கள்

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஏ.எல்.எம். றஹ்மானிடம் (09) நேற்று அன்பளிப்பாக வழங்கிவைக்கப்பட்டன

இதன் போது வைத்தியர்களான எம். எம். ஹபீலுல் இலாஹி , ஏ. ஆர். எம். ஹாரிஸ், ஏ. எல். பாறுக், என் . சுஹைப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# தேன் எடுப்பதற்காக சென்ற நபரொருவர் கரடி தாக்குதலுக்கு உள்ளான நிலையில் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதி

திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்

திருகோணமலை - மொரவெவ காட்டுப்பகுதிக்குள் தேன் எடுப்பதற்காக சென்ற நபரொருவர் கரடி தாக்குதலுக்கு உள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இச்சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கரடி தாக்குதலுக்கு உள்ளானவர் ரொட்டவெவ-மிரிஸ்வெவ பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான ஆர்.இம்தியாஸ் (40வயது) எனவும் தெரியவருகின்றது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது-

வீட்டிலிருந்து தேன் எடுப்பதற்காக ஆறு பேரைக் கொண்ட குழுவினர் சென்றதாகவும், தேன் தேடுவதற்காக வேறு வேறாக பிரிந்து சென்ற போது மரத்துக்கு அருகில் மறைந்திருந்த கரடி தாக்கியதாகவும் இதனையடுத்து குறித்த நபரை அவருடன் சென்ற குழுவினர் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும் இதனை அடுத்து மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

குறித்த நபரின் கை மற்றும் முகத்தில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது தற்போது தேன் மற்றும் காட்டு புளியம்பழம் ஆய்வதற்காக கந்தளாய் மஹதிவுல்வெவ ரொட்டவெவ போன்ற பிரதேசங்களிலிருந்து காட்டுக்குச் செல்வதாகவும் மக்கள் மிகவும் கவனமாக கூட்டாக இணைந்து காட்டுக்குள் செல்ல வேண்டும் எனவும் அறிவுறுத்தல் வழங்குகின்றனர்.

ஆனாலும் அறிவுறுத்தல்களை பின்பற்றாமல் காட்டுப்பகுதிக்குள் செல்வதினால் இவ்வனரத்தம் இடம்பெறுவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

# ஓட்டமாவடி மஜ்மா நகரில் மூன்று வெளிநாட்டுப் பிரஜைகள் உட்பட 2680 உடல்கள் நல்லடக்கம்

(எச்.எம்.எம்.பர்ஸான்)



கொரோனா தொற்றினால் மரணமடைந்த நபர்களை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி - மஜ்மா நகர் மையவாடியில் புதன்கிழமை (8) ஆம் திகதி அடக்கம் செய்யப்பட 37 உடல்களுடன் அங்கு இதுவரை 2680 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாக ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

செப்டம்பர் 1 ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரையான நாட்களில் 265 உடல்கள் அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. ஆகஸ்ட் மாத இறுதி வாரத்தில் 306 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டன.

அந்தவகையில் கடந்த இரு வாரங்களை ஒப்பிடும்போது இவ்வாரத்தில் அடக்க வீதம் குறைவடைந்து காணப்படுகின்றன.

நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வரும் உடல்களை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி மஜ்மா நகர் மையவாடியில் இதுவரை மூன்று வெளிநாட்டுப் பிரஜைகளின் உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாக தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

# காணாமல் போன பெண் இதுவரை கிடைக்கவில்லை

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுவரெலியா கிக்கிலியமான வனப்பகுதியில் கடந்த 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விறகு சேகரிக்க தனது தாயுடன் சென்ற 25 வயது பெண் காணாமல் போய் நேற்றுடன் நான்கு நாட்களாகியும் நேற்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

இதனை தொடர்ந்து நேற்று 9 ஆம் திகதி வியாழக்கிழமை விசேட பொலிஸ் படையினரும் இராணுவத்தினரும் தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா பிலான்டேஷன் தோட்ட கீழ் பிரிவில் வசிக்கும் ஜெயபாலன் கவிபுகனலானி வயது (25) என்ற திருமணமாகாத பெண்ணே இவ்வாறு காணாமல் போயுள்ளார். காணாமல் போன தனது மகள் தன்னுடன் கடந்த 5.9.2021 ஞாயிற்றுக்கிழமை காலை நுவரெலியா கிக்கிலியமான வனப்பகுதிக்கு விறகு சேகரிக்கச் சென்றதாகவும் அங்கு தனது மகள் காணாமல் போனதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையின்போது குறித்த பெண்ணின் தாயார் தெரிவித்துள்ளார். தன்னோடு விறகு சேகரித்துக் கொண்டிருந்த மகள் அவ்விடத்திலிருந்து எவ்வாறு காணாமல் போனார் என்பது தெரியவில்லை என்றும் சில மணிநேரம் அவ்விடத்தில் கூக்குரல் இட்டு மகளை தேடியதாகவும் அவள் அங்கு இல்லை என்றும் தாய் பொலிஸாரிடம் மேலும் தெரிவித்துள்ளார். காணாமல் போன பெண் மனநலம் பாதிக்கப்பட்ட பெண் என்றும் அவரைத் தேடுவதற்கு நேற்று (9.9.2021) விசேட பொலிஸாரும் இராணுவத்தினரையும் ஈடுபடுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கி வைப்பு



(கிண்ணியா நிருபர்)

கொரோனா தொற்றினால் ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கும் வேளையில் கிண்ணியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு தொழில் செய்ய முடியாது கஷ்டப்படும் குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

எம். வி.எம் .(M.B.M) பவுண்டேஷன் நிதி உதவியுடன் , கிண்ணியா தீர்ப்பாயத்தின் நேரடி பங்களிபுடன் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு தொழில் செய்ய முடியாது கஷ்டப்படும் குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சம்மாவச்சதீவு, பூவரசந்தீவு, மஃரூப் கிராமம் , நடுத்தீவு, உப்பாறு, காக்காமுனை மணியரசன்குளம், பெரியாற்றுமுனை மற்றும் ஆலங்கேணி போன்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள வறுமையில் கோட்டில் வாழும் மக்களுக்கு இந்த உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

அரிசி, சீனி, பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, தேயிலை, போன்ற பொருட்கள் சுமார் ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்படுகிறது.

முதற்கட்டமாக சம்மாவச்சதீவு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள 30 குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகள் கிண்ணியா பிரதேச செயலாளர் எம். ஏ.எம். அனஸ் அவரகளினால் வழகி வைக்கப்பட்டது.

மேலும் இதன் போது கிண்ணியா தீர்ப்பாயத்தின் தலைவர் எம்.எப்.பர்ஸித் செயலாளர் ஐ.ஏ.எம்.முயீஸ் மற்றும் ஊடகவியலாளர் ஐ.எம்.இர்ஷாத் ஆகியோர் கலந்து கொண்டு வழங்கி வைக்கப்பட்டன

அதனை தொடர்ந்து பூவரசந்தீவு ,புதுக்குடியிருப்பு, மணியரசன்குளம் பிரதேசத்திலுள்ள வாழ்வாதாரம் பாதிக்கப்பட கஷ்டப்படும் மக்களுக்கு பிரதேச செயலாளரினால் வழங்கிவைக்கப்பட்டது.

ஏனைய பிரதேசங்களிலுள்ளவர்களுக்கு கட்டங்கட்டமாக வழங்கப் படவுள்ளது.

# 16 இலட்சம் பெறுமதியான வைத்திய உபகரணங்கள் கிண்ணியா தள வைத்தியசாலைக்கு வழங்கி வைப்பு




(எப்.முபாரக்)

16 இலட்சம் பெறுமதியான வைத்திய உபகரணங்களை முஸ்லிம் எய்ட் கிண்ணியா தள வைத்தியசாலைக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கிண்ணியா ஆதார வைத்தியசாலையின் கொவிட் 19 விசேட சிகிச்சைப் பிரிவிற்கு 16 இலட்சம் ரூபா பெறுமதியான அவசர சிகிச்சை உபகரணங்களை நேற்று முஸ்லிம் எய்ட் நிறுவனம் கிண்ணியா தள வைத்தியசாலையின் பணிப்பாளர் ஐ.எம்.ஜவாஹீர் அவர்களிடம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வைத்தியர்கள், தாதிமார், முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் அதிகாரிகள் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் சனத்தொகை அதிகமாக உள்ள பிரதேசமாக கிண்ணியாக அமைவதுடன் அண்மையில் அதிகமான மக்கள் கொவிட் தாக்கத்திற்குள்ள உள்ளானார்கள்.

மேலும், கிண்ணியாவிற்கு அண்மைய பிரதேசங்களான மூதூர், தம்பலகமம், முள்ளிப்பொத்தானை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த கொவிட் தொற்று நோயாளர்களுக்கும் இங்கு அவசர சிகிச்சை அளிக்கப்படுகின்றது. கொவிட் சிகிச்சைக்கென விரிவாக்கப்பட்டுள்ள புதிய பிரிவிற்கு பல்வேறு வைத்திய உபகரணங்கள் அவசரமாக தேவைப்பட்ட நிலையில், வைத்தியசாலை நிர்வாகத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கையினை அடுத்து முஸ்லிம் எய்ட் நிறுவனம் இம் மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

கொவிட் -19 நோயாளிகளுக்கு சிகிச்சையளித்து அவர்களின் உயிர்களைப் பாதுகாக்க உதவும் வகையில் மீண்டும் இம் மருத்துவ உபகரணங்களை வழங்கியுள்ளது. ஒட்சிசன் வழங்கும் உயர் உபகரணம், பல்டிபாரா மொனிடர் மற்றும் 10 பல்ஸ் ஒட்சிமீட்டர் என்பன இவ் உபகரணத் தொகுதியில் அடங்கும்

தோற்று நோய் பரவலைத் தடுத்தல் மற்றும் சிகிச்சையளித்தலுக்கு உதவுதல் ஆகிய மனிதநேய பணிகளின் ஒரு பகுதியாக முஸ்லிம் எய்ட் நிறுவனம் இலங்கை முழுவதும் கொவிட் -19 நோய்த் தடுப்பு மற்றும் நிவாரணப் பணிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றது.